25th July 1962]

25-ம் தேதியிட்ட கோரிக்கை ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

(இ) அப்படியானல், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): A representation was received by the Collector of Salem. The matter is under examination by the State Transport Authority.

* **614 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி-சென்னை எக்ஸ்பிரஸ் தற்போது இராணிப்பேட்டை-ஆற்காடு-வேலூர் வழியாகச் செல்வதை விசாலமும் போக்குவரத்துக் குறைவாகவுமுள்ள ராணிப்பேட்டை-திருவலம் வழியாக வேலூர் போக ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

கல்விக்காக வட்டியில்லாக் கடன் வசதி.

* **615 கேள்வி—திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உபாத்தியாயர்கள், என்.ஜி.ஓ.-க்கள் குழந்தைகளுக்குப் பட்டப் படிப்புக்காக வழங்கப்பட்டுள்ள வட்டியில்லாக் கடன் சலுகையை பிற்பட்ட வகுப்பினருக்கும், அரிசனங்களுக்கும் விஸ்தரிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN: The interest-free loan scheme has been extended to all poor candidates. Students eligible for concessions like scholarships, fee concessions, etc., are allowed the option to choose between the scholarship or other concessions and the interest-free loan but will not be allowed both the concessions.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தக் கடன் வசதி செய்து கொடுப்பது சர்க்கார் ஊழியர்களுடைய பிள்ளைகளுக்கு மட்டுமா ? வறுமை காரணமாகப் படிக்க முடியாத எல்லாக் குழந்தைகளுக்குமே இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வறுமை காரணமாக, மற்றவர்களுக்கும் இதை விஸ்தரிப்பது என்பது சர்க்கார் நோக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தொழில் துறையில் மட்டும் அன்றி வைத்தியம் போன்ற மற்ற கல்வித் துறைகளிலும் இந்த அனுகூலம் விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சர்க்காரிடம் முடிவு இல்லை.